TNPSC JOB

# அரையாண்டுத் தேர்வு-2025

வகுப்பு : 9
காலம் : 3.00 மணி

## தமிழ்

பதிவு எண் :

மொத்த மதிப்பெண்கள் : 100

**குறிப்புகள்:**

- மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி-I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15x1=15

1. சிந்தாமணி என்பதன் இலக்கணக்குறிப்பு ......................
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
2. மாடு – என்பதன் பொருள் என்ன ?
   அ) கீழே ஆ) மேலே இ) பக்கம் ஈ) தொலைவு
3. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
   அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறு தழுவுதல்
   ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறு தழுவுதல் தொன்மையானவை
   இ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறு தழுவுதல்
   ஈ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏழு தழுவுதல்
4. தீரா இடும்பைத் தருவது எது ?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
5. வாதவூரடிகள் என அழைக்கப்படுபவர் ............................
   அ) சேக்கிழார் ஆ) பெரியாழ்வார் இ) மாணிக்கவாசகர் ஈ) இராசராசன்
6. கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள் ?
   அ) நஞ்சை நிலம் ஆ) களர் நிலம் இ) உவர் நிலம் ஈ) புஞ்சை நிலம்
7. ‘ இரு ’ என்பது துணைவினையாக உள்ள தொடர் எது ?
   அ) பட்டம் இருக்கிறது. ஆ) பட்டம் செய்திருக்கிறேன்.
   இ) எங்கே இருக்கிறது ? ஈ) வானில் மேகம் இருக்கிறது.
8. “ வசிபட முதுநீர் புக்கு
   மலையெனத் துவரை நன்னீர் ” – பாடல் அடிகளில் முதுநீர் என்பது எது ?
   அ) மழை நீர் ஆ) கடல் நீர் இ) ஆற்று நீர் ஈ) நிலத்தடி நீர்
9. பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று .....
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) தாடிக்கொம்பு ஈ) திரிபுவனவீரேசுவரம்
10. பஞ்சபாண்டவர் இரதங்கள் என அழைக்கப்படும் ஒற்றைக்கல் கோவில்கள் காணப்படும் இடம் ....................
    அ) காஞ்சிபுரம் ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) மாமல்லபுரம்
11. இராவண காவியத்தை இயற்றியவர் ......................
    அ) கம்பர் ஆ) சீத்தலைச்சாத்தனார் இ) புலவர் குழந்தை ஈ) மாணிக்கவாசகர்



TNPSC JOB | www.tnpscjob.com

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளம் குருளைமிக்கு இனைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலியசெந் நாய்உய ங்குமே!

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் ..............
அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை இ) இராவண காவியம் ஈ) தமிழ்விடுதூது

13. இப்பாடலின் ஆசிரியர் ..............
அ) சேக்கிழார் ஆ) சீத்தலைச் சாத்தனார்
இ) மாணிக்கவாசகர் ஈ) புலவர் குழந்தை

14. 'குருளை' இச்சொல்லின் பொருள் ............
அ) உருளை ஆ) குருணை இ) குட்டி ஈ) தாய்

15. அடிஎதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) வளைப்ப, வாய்வெரீஇ ஆ) இன்னிளம், இனைந்து
இ) தன்னிழல், தங்கவே ஈ) மன்னிய, இன்னிளம்

## பகுதி-II பிரிவு -1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**குறுகிய விடையளிக்கவும். ( 21வது வினா கட்டாய வினா) .** **4x2=8**

16. நடுகல் என்றால் என்ன ?

17. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு இயற்றப்பட்டது இராவண காவியம்.
ஆ) தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

18. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ?

19. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும் ?

20. " கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன், கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ " இடம் சுட்டிப் பொருள் தருக.

21. ' தலை' என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

## பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

22. மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க. **5x2=10**
அ) எட்டாக்கனி ....................
ஆ) கிணற்றுத்தவளை ....................

23. பூக்கும் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. பொருள் எழுதி தொடர் அமைக்கவும்.
அ) அலை ஆ) அழை

25. தமிழாக்கம் செய்க.
அ) Lexicon ஆ) Cave temple

26. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.
அ) இளமையில் கல்வி ....................
ஆ) கற்றோர்க்குச் சென்ற ....................

27. அகராதியில் காண்க.
அ) பெளரி – ஆ) கிடுகு –



TNPSC JOB | www.tnpscjob.com

28. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

அ) பொருந்து – பொருத்து ஆ) குவிந்து – குவித்து

## பகுதி- III பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

29. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்படும். தமிழரின் தொடக்க காலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலை வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்கள் சுண்ணாம்புக் கலவையால் ஆன சுதைச் சிற்பங்களாக இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.

அ) தமிழின் தொன்மையான இலக்கண நூல் எது ?

ஆ) நடுகல் யாருக்கு நடப்பட்டது ?

இ) கண்ணகிக்கு சிலை வடித்த செய்தி இடம்பெற்ற நூல் எது ?

30. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது ?

31. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

## பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**(34வது வினாவுக்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 2x3=6

32. தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.

33. குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

34. அ) "நீர்இன்று" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) "கல்லிடைப்" எனத் தொடங்கும் இராவண காவியப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## பிரிவு-3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

35. அளவையாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

36. எண்ணுப்பெயர், திசைப்பெயர்களின் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் எழுதுக.

37. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

## பகுதி- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.



TNPSC JOB | www.tnpscjob.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அ) உனக்குப் பிடித்தவை / உங்கள் பொறுப்புகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க.

1) Strengthen the body
2) Love your food
3) Thinking is great
4) Walk Like a bull
5) Union is strength

42. அஞ்சல் அலுவலகத்தில் பணம் பெறும் படிவத்தை நிரப்புக.

## பகுதி- V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x8=24**

43. அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44. அ) ' தண்ணீர்' கதையைப் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

45. குறிப்புகளைக் கொண்டு தலைப்பு எழுதி கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு – சாலை விதிகள்– ஊர்தி ஓட்டுநருக்கான நெறிமுறைகள் – விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) முன்னுரை – சுற்றுப்புறத் தூய்மை – காற்றில் மாசு – நீரில் மாசு – விண்வெளியில் மாசு – நமது கடமை – முடிவுரை .

****************************



TNPSC JOB | www.tnpscjob.com